This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores

## சுராவின்

# சமூக அறிவியல்

## 10ஆம் வகுப்பு



புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.

இலவச இணைப்பு
சுய மதிப்பீடு பயிற்சி நூல் மற்றும் வரைப்படப் பயிற்சி புத்தகம்

**சிறப்பம்சங்கள்**

- பாடப்பகுதிகளிலுள்ள அனைத்து வினாக்களுக்கும் முழுமையான, எளிமையான விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு பாடத்திலும் மிகுதியான அளவில் கூடுதல் வினா விடைகள் தரப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் அலகுத் தேர்வு வினாத்தாள் விடைகளுடன் தரப்பட்டுள்ளது.
- அரசு மாதிரி வினாத்தாள் 2019 (Govt, MQP 2019), காலாண்டுத் தேர்வு 2019 (QY- 2019), அரையாண்டுத் தேர்வு 2019 (HY -2019) மற்றும் அரசு துணைத் தேர்வு செப்டம்பர் 2020 (Sep-2020) வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- மாதிரி வினாத்தாள்கள் 1 முதல் 6 வரை (PTA) வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- அரசு துணைத்தேர்வு, செப்டம்பர் – 2020 வினாத்தாள் விடைகளுடன் தரப்பட்டுள்ளது.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

www.surabooks.com

orders@surabooks.com
Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores

**2021-22 புதிய பதிப்பு**
**© வெளியீட்டாளர்கள்**

**All rights reserved © SURA Publications.**
No part of this book may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, digitally, electronically, mechanically, photocopying, recorded or otherwise, without the written permission of the publishers. Strict action will be taken.

ISBN : 978-93-5330-050-0
குறியீட்டு எண். **SG331**

| எழுதி வழங்கியவர் | திருத்தியவர் |
|---|---|
| **திருமதி. ப. சுபத்ரா, M.A., M.Ed.** சென்னை | **திரு. க. கண்ணப்பன், M.A., B.Ed.,** சென்னை |
| **திரு. அ. சண்முகம், M.A, B,Ed.** நாமக்கல் | **மதிப்பாளர்** |
| **திருமதி. த. அகிலாண்டேஸ்வரி, M.A, M.Ed.** சென்னை | **முனைவர். வ. வேல்முருகன் M.A., M.Phil., Ph.D.** துறைத்தலைவர், சேலம் |

**Also available for Std - X**

Guides :
- Sura's Tamil
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Science (EM/TM)
- Sura's Social Science (EM/TM)

**தலைமை அலுவலகம்**

**சூரா பப்ளிகேஷன்ஸ்**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர்,
சென்னை-600 040.

**Phones** : 91-44-4862 9977, 486 27755
**Mobile** : 96001 75757 / 81242 01000 / 81243 01000
**Whatsapp**: 81242 01000
**e-mail** : orders@surabooks.com
**website** : www.surabooks.com

**மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு**
புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 9600175757 / 8124301000
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
ஆன்லைன் வலைதளம் : www.surabooks.com
பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores

# பதிப்பாசிரியர் உரை

10ஆம் வகுப்பிற்கான **சூராவின் சமூக அறிவியல் வழிகாட்டியை** வெளியிடுவதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி, பாடங்களை தெளிவாகவும், முழுமையாகவும் புரிந்து கொள்வதற்கு தேவைப்படும் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி நமது வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு கற்பிக்க உறுதுணையாகவும், மாணவர்களுக்கு கற்க உறுதுணையாகவும் இந்த வழிகாட்டி இருக்கும் வகையில் வினாக்களுக்கான விடைகள் விளக்கமாகவும், எளிமையாகவும் தரப்பட்டுள்ளன.

பாடப்புத்தகத்தின் அனைத்து பாடங்களையும் திறமையுடன் கற்றுக் கொள்வதற்கு உதவும் வகையில் விரிவான கூடுதல் வினா விடைகள் அனைத்து பிரிவின் கீழும் தரப்பட்டுள்ளன.

நமது வழிகாட்டி பல சிறப்பம்சங்களை கொண்டிருப்பினும், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பிப்பதின் பாங்கினை குறைத்து மதிப்பிட முடியாது. அது நிறைந்த மதிப்புடையது.

மாணவச் செல்வங்களின் தேவைகளை நிறைவு செய்யவும், ஆசிரியப் பெருந்தகையினரின் கற்பிக்கும் பாங்கினை மேம்படுத்தவும் இந்த வழிகாட்டி பெரிதும் உதவும் என்று உறுதியுடன் நம்புகிறோம்.

மாணவமணிகள் தேர்வில் முழு வெற்றி பெற இறைவருளை வேண்டுகிறோம்.

- **சுபாஷ் ராஜ்,** B.E., M.S.
பதிப்பகத்தார்
சுரா பப்ளிகேஷன்ஸ்

***வாழ்த்துக்கள் !!!***



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS:

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

## DIRECT DEPOSIT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **36550290536** | Our A/c No. | : **21000210001240** |
| Bank Name | : **STATE BANK OF INDIA** | Bank Name | : **UCO BANK** |
| Bank Branch | : PADI | Bank Branch | : Anna Nagar West |
| IFSC | : SBIN0005083 | IFSC | : UCBA0002100 |
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **6502699356** | Our A/c No. | : **1154135000017684** |
| Bank Name | : **INDIAN BANK** | Bank Name | : **KVB BANK** |
| Bank Branch | : ASIAD COLONY | Bank Branch | : Anna Nagar |
| IFSC | : IDIB000A098 | IFSC | : KVBL0001154 |

After Deposit, please send challan and order to our address.
email : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**.

The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

## STUDENTS :

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar,
Chennai - 600 040.
Phones : 91-44-4862 9977, 486 27755
Mobile : 96001 75757/ 81242 01000/81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com

www.surabooks.com



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores

# பொருளடக்கம்

## வரலாறு


| | | | |
|---|---|---|---|
| அலகு 1 | முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும் | 1-14 | ஜூன் |
| அலகு 2 | இரு உலகப் போர்களுக்கு இடையில் உலகம் | 15-28 | ஜூலை |
| அலகு 3 | இரண்டாம் உலகப்போர் | 29-42 | ஜூலை |
| அலகு 4 | இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம் | 43-54 | ஆகஸ்ட் |
| அலகு 5 | 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் | 55-68 | ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் |
| அலகு 6 | ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள் | 69-82 | அக்டோபர் |
| அலகு 7 | காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும் | 83-96 | அக்டோபர் |
| அலகு 8 | தேசியம்: காந்திய காலகட்டம் | 97-112 | நவம்பர் |
| அலகு 9 | தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம் | 113-122 | நவம்பர் |
| அலகு 10 | தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள் | 123-138 | நவம்பர் மற்றும் டிசம்பர் |


## புவியியல்


| | | | |
|---|---|---|---|
| அலகு 1 | இந்தியா - அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு | 139-158 | ஜூன் |
| அலகு 2 | இந்தியா - காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள் | 159-170 | ஜூன் |
| அலகு 3 | இந்தியா - வேளாண்மை | 171-186 | ஜூலை |
| அலகு 4 | இந்தியா - வளங்கள் மற்றும் தொழிலகங்கள் | 187-202 | ஆகஸ்ட் |
| அலகு 5 | இந்தியா - மக்கள் தொகை, போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் வணிகம் | 203-220 | ஆகஸ்ட் |
| அலகு 6 | தமிழ்நாடு - இயற்கைப் பிரிவுகள் | 221-240 | அக்டோபர் |
| அலகு 7 | தமிழ்நாடு - மானுடப் புவியியல் | 241-260 | நவம்பர் |




orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores

## குடிமையியல்



| | | | |
|---|---|---|---|
| அலகு 1 | இந்திய அரசியலமைப்பு | 261-270 | ஜூன் |
| அலகு 2 | நடுவண் அரசு | 271-282 | ஜூலை |
| அலகு 3 | மாநில அரசு | 283-294 | ஆகஸ்ட் |
| அலகு 4 | இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை | 295-304 | அக்டோபர் |
| அலகு 5 | இந்தியாவின் சர்வதேச உறவுகள் | 305-318 | நவம்பர் |



## பொருளியல்



| | | | |
|---|---|---|---|
| அலகு 1 | மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி: ஓர் அறிமுகம் | 319-332 | ஜூன் |
| அலகு 2 | உலகமயமாதல் மற்றும் வர்த்தகம் | 333-342 | ஜூலை |
| அலகு 3 | உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து | 343-354 | ஆகஸ்ட் |
| அலகு 4 | அரசாங்கமும் வரிகளும் | 355-366 | அக்டோபர் |
| அலகு 5 | தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள் | 367-378 | நவம்பர் |



www.surabooks.com



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



# அலகு 1

# முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்




## கற்றலின் நோக்கங்கள்

- ஐரோப்பிய வல்லரசுகளிடையே பகைமையும் மோதல்களும் ஏற்படுவதற்கு இட்டுச் சென்ற காலனியாதிக்கப் போட்டி.
- கிழக்கு ஆசியாவில் ஜப்பான் அதிக வலிமை மிகுந்த நாடாகவும் ஆக்கிரமிப்பு செய்யும் தன்மை கொண்ட நாடாகவும் மேலெழுதல்.
- காலனியாதிக்கம் ஆப்பிரிக்காவின் மீது தாக்கத்தை ஏற்படுத்துதல்.
- முதல் உலகப்போருக்கான காரணங்கள், போரின் போக்கு, விளைவுகள்.
- வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையும் அதன் சரத்துக்களும்
- ரஷ்யப் புரட்சிக்கான காரணங்களும் அதன் போக்கும் விளைவுகளும்.
- பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுதலும் அதன் செயல்பாடுகளும் தோல்வியும்.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்

**1. முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை?**

அ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, உதுமானியர்
ஆ) ஜெர்மனி, ஆஸ்திரிய- ஹங்கேரி, ரஷ்யா
இ) ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தாலி
ஈ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி **[விடை : அ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, உதுமானியர்]**

**2. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?**

அ) சீனா ஆ) ஜப்பான் இ) கொரியா ஈ) மங்கோலியா **[விடை: ஆ) ஜப்பான்]**

**3. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்?** *(PTA-6)*

அ) லெனின் ஆ) மார்க்ஸ்
இ) சன் யாட் சென் ஈ) மா சே துங் **[விடை: அ) லெனின்]**

**4. மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?**

அ) ஆகாயப் போர்முறை ஆ) பதுங்குக் குழிப் போர்முறை
இ) நீர்மூழ்கிக் கப்பல் போர்முறை ஈ) கடற்படைப் போர்முறை

**[விடை : ஆ) பதுங்குக் குழிப் போர்முறை]**



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



**5. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?**

அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ் இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

**[விடை: அ) பிரிட்டன்]**

**6. பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது?**

அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) இத்தாலி ஈ) பிரான்ஸ் **[விடை: ஆ) ரஷ்யா]**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. _______ ஆம் ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது. **[விடை: 1894]**
2. 1913ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட ___________ உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதியநாடு உருவாக்கப்பட்டது. **[விடை: இலண்டன்]**
3. ______ ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது. **[விடை: 1902]**
4. பால்கனில் ________ நாடு பல்வகை இனமக்களைக் கொண்டிருந்தது. **[விடை: மாசிடோனியா]**
5. டானென்பர்க் போரில் ___________ பேரிழப்புகளுக்கு உள்ளானது. **[விடை: ரஷ்யா]**
6. பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் ___________ ஆவார். **[விடை: கிளமென்சோ]**
7. _______ ஆம் ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. **[விடை: 1925]**

*PTA–1*

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்

**1.** i) துருக்கியப் பேரரசு, பால்கனில் துருக்கியரல்லாத பல இனமக்களைக் கொண்டிருந்தது.
ii) துருக்கி மையநாடுகள் பக்கம் நின்று போரிட்டது.
iii) பிரிட்டன் துருக்கியைத் தாக்கி கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றியது.
iv) சூயஸ் கால்வாயைத் தாக்க துருக்கி மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

அ) (i), (ii) ஆகியன சரி ஆ) (i), (iii) ஆகியன சரி
இ) (iv) சரி ஈ) (i), (ii), (iv) ஆகியன சரி

**[விடை: ஈ) (i), (ii) (iv) ஆகியன சரி]**

**2. கூற்று : ஜெர்மனியும் அமெரிக்காவும் மலிவான தொழிற்சாலைப் பொருள்களை உற்பத்தி செய்து இங்கிலாந்தின் சந்தையைக் கைப்பற்றின.**

**காரணம் : இருநாடுகளும் தங்கள் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்தன.**

அ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் சரி.
ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் தவறு.
ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று தவறு.

**[விடை: ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.]**

**3. கூற்று : ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தக்களரியான போர்களில் முடிந்தன.**

**காரணம் : சொந்த நாட்டு மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது.**

அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.
ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.
ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று தவறு. **[விடை: அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி]**





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores





## IV. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரெஸ்ட் – லிடோவஸ்க் உடன்படிக்கை | - | வெர்செய்ல்ஸ் |
| 2. | ஜிங்கோயிசம் | - | துருக்கி |
| 3. | கமால் பாட்சா | - | ரஷ்யாவும் ஜெர்மனியும் |
| 4. | எம்டன் | - | இங்கிலாந்து |
| 5. | கண்ணாடி மாளிகை | - | சென்னை |

**விடை:**

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரெஸ்ட் – லிடோவஸ்க் உடன்படிக்கை | - | ரஷ்யாவும் ஜெர்மனியும் |
| 2. | ஜிங்கோயிசம் | - | இங்கிலாந்து |
| 3. | கமால் பாட்சா | - | துருக்கி |
| 4. | எம்டன் | - | சென்னை |
| 5. | கண்ணாடி மாளிகை | - | வெர்செய்ல்ஸ் |

## V. சுருக்கமாக விடையளிக்கவும்

**1. சீன – ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?**

(i) 1894 இல் ஜப்பான் சீனாவின் மீது வலுக்கட்டாயமாக ஒரு போரை மேற்கொண்டது. இச்சீன – ஜப்பானியப் போரில் (1894 – 1895 ) சீனாவைச் சிறிய நாடான ஜப்பான் தோற்கடித்தது உலகை வியக்க வைத்தது.

(ii) தொடர்ந்து ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் எச்சரிக்கையை மீறி ஜப்பான் லியோடங் தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் சேர்த்து இணைத்துக் கொண்டது.

(iii) இந்த நடவடிக்கை மூலம் கிழக்கு ஆசியாவில் தானே வலிமை அரசு என ஜப்பான் மெய்ப்பித்தது.

**2. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.** *QY, HY-2019*

**மூவர் கூட்டு நாடுகளின் பெயர்கள் :** இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா.

**3. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?**

**ஐரோப்பியப் போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் :**

(i) இங்கிலாந்து – ஆரவாரமான நாட்டுப்பற்று (jingoism)

(ii) பிரான்ஸ் – வெறிகொண்ட நாட்டுப்பற்று (chauvinism)

(iii) ஜெர்மனி–ஜெர்மானியக் கலாச்சாரத்தை மிக உயர்வாக நினைப்பது (Kultur)

**4. பதுங்குக் குழிப்போர் முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?** *PTA–3*

**பதுங்குக் குழிப்போர் :**

(i) போர்வீரர்களால் தோண்டப்படும் பதுங்குக் குழிகள் எதிரிகளின் சுடுதலில் இருந்து தங்களை காத்துக் கொண்டு பாதுகாப்பாக நிற்க உதவின.

(ii) பிரதானப் பதுங்குக்குழிகள் ஒன்றோடொன்றும் பின்புறமுள்ள குழிகளோடும் இணைக்கப்பட்டிருக்கும். அவற்றின் வழியாக உணவு ஆயுதங்கள், கடிதங்கள், ஆணைகள் ஆகியவை வந்துசேரும். புதிய வீரர்களும் வந்து சேர்வர்.

**5. முஸ்தபா கமால் பாட்சா வகித்தப் பாத்திரமென்ன?**

(i) துருக்கி மீண்டும் ஒரு நாடாக மறுபிறவி எடுப்பதற்கு முஸ்தபா கமால் பாட்சா முக்கிய பங்கு வகித்தார்.

(ii) கமால் பாட்சா துருக்கி நாட்டிற்கு விடுதலையை மட்டும் பெற்றுத்தரவில்லை. அவர் துருக்கியை நவீனமயமாக்கி அதை எதிர்மறையான அங்கீகாரத்திலிருந்தும் மாற்றியமைத்தார்.

(iii) சுல்தானியத்திற்கும் கலீபாத்திற்கும் முற்றுப் புள்ளி வைத்தார். சோவியத் யூனியனின் ஆதரவு அவருக்குப் பேருதவியாய் அமைந்தது.



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



**6. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக.**

(i) பன்னாட்டுச் சங்கம் முதல் உலகப்போரில் வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாகவே காணப்பட்டது.

(ii) சங்கத்திற்கென்று இராணுவம் இல்லை என்பதால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த அதனால் இயலவில்லை.

## VI. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்

**1. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.** *PTA–1; Sep-2020*

**முதல் உலகப்போருக்கான காரணங்கள் –**

**அ) ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும் எதிர் அணி சேர்க்கைகளும் :**

(i) 1900-ல் ஐரோப்பிய வல்லரசுகளில் ஐந்து அரசுகள், இரண்டு ஆயுதமேந்திய முகாம்களாகப் பிரிந்தன.

(ii) ஒரு முகாம் மையநாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி ஆகியவற்றைக் கொண்டிருந்தது. அவை 1882 இல் மூவர் உடன்படிக்கையை மேற்கொண்டன.

(iii) இதன்படி ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் பரஸ்பரம் உதவிகள் செய்து கொள்ளும். மற்றொரு முகாமில் பிரான்சும் ரஷ்யாவும் அங்கம் வகித்தன.

(iv) 1894 இல் மேற்கொண்ட உடன்படிக்கையின்படி இவ்விரு நாடுகளில் ஏதாவது ஒன்று ஜெர்மனியால் தாக்கப்படும் பட்சத்தில் பரஸ்பரம் துணை நிற்கும் என உறுதி செய்யப்பட்டது.

(v) இவ்வாறு இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய மூவரைக் கொண்ட மூவர் கூட்டு உருவாக்கப்பட்டது.

**ஆ) வன்முறை சார்ந்த தேசியம் :**

(i) தேசப்பற்றின் வளர்ச்சியோடு "எனது நாடு சரியோ தவறோ நான் அதை ஆதரிப்பேன்" என்ற மனப்பாங்கும் வளர்ந்தது.

(ii) இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று, பிரான்ஸின் அதி தீவிரப்பற்று, ஜெர்மனியின் வெறிகொண்ட நாட்டுப்பற்று ஆகிய அனைத்தும் தீவிர தேசியமாக போர்வெடிப்பதற்கு தீர்மானமாக பங்காற்றியது.

**இ) ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு:**

(i) ஜெர்மன் பேரரசரான இரண்டாம் கெய்சர் வில்லியம் ஜெர்மனியே உலகத்தின் தலைவன் எனப் பிரகடனம் செய்தார்.

(ii) இந்நிலையில் ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு இயல்பு கொண்ட அரசியல் விவேகத்தையும் விரைவாகக் கட்டப்படும் அதன் கப்பற்படை தளங்களையும் கண்ணுற்ற இங்கிலாந்து, ஜெர்மன் கப்பற்படை தனக்கு எதிரானது என முடிவு செய்தது.

(iii) ஆகவே இங்கிலாந்தும் கப்பற்படை விரிவாக்கப் போட்டியில் இறங்கவே இரு நாடுகளுக்கிடையிலான பதற்றம் மேலும் அதிகரித்தது.

**ஈ) பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை ;**

(i) பிரான்சும் ஜெர்மனியும் பழைய பகைவர்கள்.

(ii) 1871 இல் ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்ட பிரான்ஸ் அல்சேஸ், லொரைன் பகுதிகளை ஜெர்மனியிடம் இழக்க நேரிட்டது.

(iii) மொராக்கோ விவகாரத்தில் ஜெர்மனியின் தலையீடு இக்கசப்புணர்வை மேலும் அதிகரித்தது.

(iv) மொராக்கோவில் பிரான்சின் நலன்கள் சார்ந்து, இங்கிலாந்து பிரான்சோடு மேற்கொண்ட ஒப்பந்தத்தை ஜெர்மனி எதிர்த்தது.

**உ) பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு :**

(i) 1908 ஆம் ஆண்டில் துருக்கியில் ஒரு வலுவான, நவீன அரசை உருவாக்கும் முயற்சியாக இளம்துருக்கியர் புரட்சி நடைபெற்றது.





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



(ii) பாஸ்னியாவையும் ஹெர்சகோவினாவையும் தான் இணைத்துக் கொண்டதாக ஆஸ்திரியா அறிவித்தது. ஆஸ்திரியாவின் இவ்வறிவிப்பு செர்பியாவில் தீவிரமான எதிர்ப்பைத் தூண்டியது.

(iv) ஆஸ்திரியாவிற்கும் செர்பியாவிற்குமான இப்பகை 1914 இல் போர் வெடிக்கக் காரணமாயிற்று.

**ஊ) பால்கன் போர்கள் :**

(i) பதினெட்டாம் நூற்றாண்டின் முதல்பாதியில் தென்மேற்கு ஐரோப்பியாவில் துருக்கி வலிமை வாய்ந்த நாடாகத் திகழ்ந்தது.

(ii) பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் துருக்கியப் பேரரசின் உறுதியற்ற அரசியல் பொருளாதாரச் சூழலைச் சாதகமாகக் கொண்டு கிரீசும் அதனைத் தொடர்ந்து ஏனைய நாடுகளும் ஒன்றன் பின் ஒன்றாகத் தங்களைத் துருக்கியின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துக் கொண்டன.

(iii) 1912 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் பால்கன் கழகம் என்ற அமைப்பை உருவாக்கின.

(iv) இக்கழகம் முதல் பால்கன் போரில் (1912 - 1913) துருக்கிய படைகளைத் தாக்கித் தோற்கடித்தன.

(v) 1913 மே திங்களில் கையெழுத்தான இலண்டன் உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.

**எ) உடனடிக் காரணம் :**

(i) பால்கனில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் உச்சக்கட்டம் பாஸ்னியாவிலுள்ள செராஜிவோ என்னும் இடத்தில் அரங்கேறியது.

(ii) 1914 ஆம் ஆண்டு ஜுன் 28ம் நாள் ஆஸ்திரியப் பேரரசரின் மகனான பிரான்ஸ் பெர்டினாண்டு, பிரின்ஸப் எனும் பெயரைக் கொண்ட பாஸ்னிய செர்பியனால் கொலை செய்யப்பட்டார்.

(iii) ஆஸ்திரியா இதனை செர்பியாவைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பாக எண்ணியது.

(iv) ஆகஸ்டு திங்கள் முதல் நாள் ஜெர்மனி ரஷ்யாவிற்கு எதிராக போர் அறிவிப்பு செய்தது.

(v) பெல்ஜியத்தின் நடுநிலைமையை மதியாது அதனை ஜெர்மனி தாக்கவே இப்போரில் இங்கிலாந்து பங்கேற்பது கட்டாயமாயிற்று.

**2. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.**

*PTA–2,6*

**வெர்சேல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்கள் :**

(i) போரைத் தொடங்கிய குற்றத்தைச் செய்தது ஜெர்மனி என்பதால் போரால் ஏற்பட்ட இழப்புகளுக்கு ஜெர்மனி இழப்பீடு வழங்க வேண்டும். எனவும மைய நாடுகள் அனைத்தும் போர் இழப்பீட்டுத் தொகையை வழங்கவும் வலியுறுத்தப்பட்டன.

(ii) ஜெர்மன் படை 1,00,000 வீரர்களை மட்டுமே கொண்டதாக அளவில் சுருக்கப்பட்டது. சிறிய கப்பற்படையொன்றை மட்டும் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

(iii) ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடை செய்யப்பட்டது.

(iv) ஜெர்மனியின் அனைத்துக் காலனிகளும் பன்னாட்டுச் சங்கத்தின் பாதுகாப்பு நாடுகளாக ஆக்கப்பட்டன.

(v) ரஷ்யாவுடன் செய்து கொள்ளப்பட்ட பிரெஸ்ட் - லிடோவஸ்க் உடன்படிக்கையையும் பல்கேரியாவுடன் மேற்கொள்ளப்பட்ட புகாரெஸ்ட் உடன்படிக்கையையும் திரும்பப் பெற்றுக் கொள்ள ஜெர்மனி வற்புறுத்தப்பட்டது.

(vi) அல்சேஸ்–லொரைன் பகுதிகள் பிரான்சுக்குத் திருப்பித் தரப்பட்டன.

(vii) முன்னர் ரஷ்யாவின் பகுதிகளாக இருந்த பின்லாந்து, எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகியன சுதந்திரநாடுகளாகச் செயல்பட அனுமதிக்கப்பட்டது.

(viii) வடக்கு ஷ்லெஸ்விக் டென்மார்க்கிற்கும் சிறிய மாவட்டங்கள் பெல்ஜியத்திற்கும் வழங்கப்பட்டன.

(ix) போலந்து மீண்டும் உருவாக்கப்பட்டது.

(x) நேசநாடுகளின் ஆக்கிரமிப்பின்கீழ் ரைன்லாந்து இருக்கும் என்றும், ரைன்நதியின் கிழக்குக்கரைப் பகுதி படை நீக்கம் செய்யப்பட்டப் பகுதியாக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.



www.surabooks.com



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



**3. லெனின் தலைமையிலான ரஷ்யப் புரட்சியின் போக்கினை விளக்குக.**

(i) முதல் உலகப்போரில் ரஷ்யாவிற்கு ஏற்பட்ட தோல்வி ரஷ்ய பொருளாதாரத்தை பெருமளவில் பாதித்தது.

(ii) இதனால் கோபமுற்ற ரஷ்ய மக்கள் மன்னருக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(iii) 1917 மார்ச் திங்கள் 15ஆம் நாள் சார் இரண்டாம் நிக்கோலஸ் பதிவி விலகினார்.

**அ) தற்காலிக அரசு :**

(i) அரசு நிர்வாகப்பணிகளை மேற்கொள்ள ஒன்றுக்கொன்று இணையான இரண்டு அமைப்புகள் இருந்தன. ஒன்று பழைய டூமா அமைப்பு, மற்றொன்று தொழிலாளர்களின் பிரதிநிதிகள் அங்கம்வகித்தக் குழு அல்லது சோவியத்.

(ii) சோவியத்துகளில் மென்ஷ்விக்குகள் ஆதிக்கம்செலுத்த, சிறுபான்மையினராக இருந்த போல்ஷ்விக்குகள் அச்சமுற்றவர்களாகவும் முடிவெடுக்க முடியாதவர்களாகவும் இருந்தனர். லெனினின் வருகையால் இச்சூழல் மாறியது.

**ஆ) தற்காலிக அரசின் தோல்வி :**

(i) புரட்சி வெடித்தபோது லெனின் சுவிட்சர்லாந்தில் இருந்தார்.

(ii) புரட்சி தொடர்ந்து நடைபெற வேண்டுமென அவர் விரும்பினார்.

(iii) "அனைத்து அதிகாரங்களும் சோவியத்திற்கே" என்ற அவரது முழக்கம் தொழிலாளர்களையும் தலைவர்களையும் கவர்ந்தது.

(iv) போர்க்காலத்தில் ஏற்பட்டிருந்த பற்றாக்குறைகளால் பெருந்துயரங்களுக்கு உள்ளாகியிருந்த மக்கள் 'ரொட்டி, அமைதி, நிலம்' எனும் முழக்கத்தால் கவரப்பட்டனர்.

(v) ஆனால் தற்காலிக அரசு இரண்டு முக்கியத் தவறுகளைச் செய்தது.

(vi) ஒன்று நிலங்களின் மறுவிநியோகம் குறித்த கோரிக்கையின் மீது எடுக்கப்பட வேண்டிய முடிவை தள்ளிவைத்தது. மற்றொன்று போரைத் தொடர்வது என எடுக்கப்பட்ட முடிவு.

(vii) அரசு 'பிரவ்தா'-வை தடை செய்து போல்ஷ்விக்குகளைக் கைது செய்தது. டிராட்ஸ்கியும் கைது செய்யப்பட்டார்.

**இ) லெனின் தலைமையில் போல்ஷ்விக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றுதல் :**

(i) அக்டோபர் திங்களில், லெனின் போல்ஷ்விக் கட்சியின் மத்தியக் குழுவை உடனடிப் புரட்சி குறித்து முடிவு செய்யக் கேட்டுக்கொண்டார்.

(ii) டிராட்ஸ்கி ஒரு விரிவான திட்டத்தைத் தயாரித்தார். நவம்பர் திங்கள் 7 ஆம் நாள் முக்கியமான அரசுக் கட்டடங்கள், குளிர்கால அரண்மனை, பிரதமமந்திரியின் தலைமை அலுவலகங்கள் ஆகியவை உட்பட அனைத்தும் ஆயுதம் ஏந்திய ஆலைத் தொழிலாளர்களாலும், புரட்சிப் படையினாலும் கைப்பற்றப்பட்டன.

(iii) 1917 நவம்பர் 8 இல் ரஷ்யாவில் புதிய கம்யூனிஸ்ட் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது.

(iv) போல்ஷ்விக் கட்சிக்கு ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி எனப் புதுப் பெயரிடப்பட்டது.

**4. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.** *(HY-2019)*

**பன்னாட்டுச் சங்கத்தின் பணிகள் :**

(i) 1920 - 1925 ஆகிய ஆண்டுகளிடையே பன்னாட்டுச் சங்கம் பல சிக்கல்களைத் தீர்த்து வைக்க அழைக்கப்பட்டது.

(ii) மூன்று பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் சங்கம் வெற்றி பெற்றது. 1920 இல் பின்லாந்தின் மேற்குக் கடற்கரைக்கும் சுவீடனின் கிழக்குக் கடற்கரைக்கும் இடையில் அமைந்திருந்த ஆலேண்டு தீவுகள் யாருக்குச் சொந்தம் என்பதில் பின்லாந்திற்கும் சுவீடனுக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டது.

(iii) பன்னாட்டுச் சங்கம் அத்தீவுகள் பின்லாந்திற்கே உரியது என தீர்ப்பளித்தது.

(iv) அடுத்த ஆண்டில் போலந்திற்கும் ஜெர்மனிக்குமிடையே மேலை சைலேஷியா பகுதியில் எல்லைப் பிரச்சினை ஏற்பட்டு, பிரச்சனையைத் தீர்த்து வைக்கச் சங்கம் அழைக்கப்பட்ட போது அப்பிரச்சினையைச் சங்கம் வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தது.





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



(v) 1925 இல் மூன்றாவது பிரச்சனை கிரீஸ் பல்கேரியா நாடுகளிடையே ஏற்பட்டதாகும்.

(vi) 1925 ஆம் ஆண்டு லொக்கார்னோ உடன்படிக்கை கையெழுத்தாகின்ற வரை பன்னாட்டுச் சங்கம் வெற்றிகரமாகவே செயலாற்றியது.


(vii) லொக்கார்னோ உடன்படிக்கையின் படி ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகள் மேற்கு ஐரோப்பாவில் பரஸ்பரம் அமைதிக்கு உத்தரவாதமளித்தன.

(viii) இதன் பின்னர் ஜெர்மனி பன்னாட்டுச் சங்கத்தில் இணைந்தது. பாதுகாப்புக் குழுவிலும் நிரந்தர இடமளிக்கப்பட்டது.

(ix) இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்காவும் ரஷ்யாவும் சங்கத்தினுடைய அரசியல் அல்லாத நடவடிக்கைகளில் பங்கேற்கத் தொடங்கின.

## VII. செயல்பாடுகள்

**1. முதல் உலகப்போரில் ஈடுபட்ட நாடுகளின் தலைநகரங்களையும் போர்க்களங்களையும் வரைபடத்தில் குறிப்பதற்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல்**






orders@surabooks.com Ph:9600175757 / 8124201000


This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



## VIII. வரைப்படப் பணி

**உலக வரைபடத்தில் பின்வரும் நாடுகளைக் குறிக்கவும்.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | கிரேட் பிரிட்டன் | 2. | ஜெர்மனி | 3. | பிரான்ஸ் | 4. | இத்தாலி |
| 5. | மொராக்கோ | 6. | துருக்கி | 7. | செர்பியா | 8. | பாஸ்னியா |
| 9. | கிரீஸ் | 10. | ஆஸ்திரிய – ஹங்கேரி | | | | |
| 11. | பல்கேரியா | 12. | ருமேனியா | | | | |




## *PTA* வினா- விடைகள்

### 5 மதிப்பெண்கள்

**1. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான காரணங்களை குறிப்பிடுக.** *(PTA–4)*

**பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான காரணங்கள் :**

(i) பன்னாட்டு சங்கம் முதல் உலகப்போரில் வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாகவே காணப்பட்டது.

(ii) சங்கத்திற்கென்று இராணுவம் இல்லை என்பதால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த அதனால் இயலவில்லை.

(iii) அமைதிக்கான இவ்வமைப்பை உருவாக்கியவர்கள் தேசியவாதத்தின் உள்ளார்ந்த ஆற்றலை உணர்ந்திருக்கவில்லை. 'கூட்டுப்பாதுகாப்பு' பாதுகாப்பு எனும் கோட்பாட்டை நடைமுறையில் செயல்படுத்தவே முடியவில்லை.

(vi) சர்வாதிகாரிகளால் தலைமையேற்கப்பட்ட இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகள் சங்கத்தின் ஆணைகளுக்குக் கட்டுப்பட மறுத்தபோது, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் மட்டுமே உறுதியாகச் செயல்படும் நிலையிலிருந்தன.





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores





## அரசு தேர்வு வினா - விடை

### 1 மதிப்பெண்

1. ஜூட்லேண்டு போரில் வெற்றி பெற்ற நாடு *QY-2019*
அ) ஜெர்மனி ஆ) இங்கிலாந்து இ) ரஷ்யா ஈ) பிரான்ஸ் **[விடை: ஆ) இங்கிலாந்து]**

2. எத்தியோப்பியாவின் படைகள் இத்தாலியின் படைகளை எவ்விடத்தில் தோற்கடித்தது? *Sep-2020*
அ) டெல்வில்லி ஆ) ஆரஞ்சு நாடு இ) அடோவா ஈ) அல்ஜியர்ஸ்
**[விடை: ஆ) இங்கிலாந்து]**

### 2 மதிப்பெண்கள்

1. **ரஷ்யப் புரட்சியின் உலகளாவிய தாக்கத்தினைக் கோடிட்டுக் காட்டுக.** *Sep-2020*
ரஷ்ய கம்யூனிஸ்ட் அரசு காலனி நாடுகளை விடுதலைக்காக போராட ஊக்குவித்து அவர்களுக்கு முழுமையாக ஆதரவையும் நல்கியது. நிலச்சீர்திருத்தம், சமூகநலன், தொழிலாளர் உரிமைகள், பாலின சமத்துவம் போன்ற இன்றியமையாதவை குறித்த விவாதங்கள் உலகஅளவில் நடைபெறத் தொடங்கின.

## கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **1 மதிப்பெண்**

1. **முதல் உலகப் போரின் மாபெரும் விளைவு ________.**
அ) பசுமை புரட்சி ஆ) பிரெஞ்சுப்புரட்சி
இ) ரஷ்யப் புரட்சி ஈ) அமெரிக்கப் புரட்சி **[விடை: இ) ரஷ்யப் புரட்சி]**

2. **பத்தொன்பதாம் நூற்றாண்டில் சக்திகள் தங்கள் நலனுக்காக நாடுகளைச் சுரண்டின.**
அ) ஆசியா ஆ) ஐரோப்பா
இ) ஆப்பிரிக்கா ஈ) ஆஸ்திரேலியா **[விடை : ஆ) ஐரோப்பா]**

3. **ஹாலந்து நாட்டின் தி ஹேக் நகரில் ________ அமைதி மாநாடுகள் கூட்டப்பட்டன.**
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து **[விடை : அ) இரண்டு]**

4. **________ போரில் பிரெஞ்சுப் படைகள் ஜெர்மானியரை வெற்றிப்பெற்றன.**
அ) டான்பெர்க் ஆ) டான்சிங் இ) மார்ன் ஈ) பால்கன் **[விடை : இ) மார்ன்]**

5. **கிழக்கு முனை ________ படைகள் ஆஸ்திரியப் படைகளை மீண்டும் மீண்டும் தோற்கடித்தன.**
அ) ரஷ்ய ஆ) ஆங்கிலேய
இ) ஜப்பான் ஈ) பிரான்ஸ் **[விடை : அ) ரஷ்ய]**

6. **ரஷ்யாவும் ________ ம் பிரேஸ்ட் - லிட்டோவஸ்க் உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.**
அ) இங்கிலாந்து ஆ) இத்தாலி இ) பிரான்ஸ் ஈ) ஜெர்மனி **[விடை : ஈ) ஜெர்மனி]**

7. **________ சூயஸ் கால்வாயைத் தாக்க முயன்றனர்.**
அ) பெல்ஜியம் ஆ) துருக்கியர் இ) போலந்து ஈ) ஆப்பிரிக்கா **[விடை : ஆ) துருக்கியர்]**

8. **ஷாண்டுங் மாகாணத்தில் சீனாவிற்கு ஜெர்மனியால் வழங்கப்பட்ட கியாச்சவ் பகுதியை ________ கைப்பற்றிக்கொண்டது.**
அ) ஜப்பான் ஆ) துருக்கி இ) ஸ்பெயின் ஈ) இத்தாலி **[விடை : அ) ஜப்பான்]**

9. **________ 1916 மே திங்களில் நேசநாடுகள் அணியில் இணைந்தது.**
அ) இத்தாலி ஆ) ஜப்பான் இ) ரஷ்யா ஈ) ஆஸ்திரியா **[விடை : அ) இத்தாலி]**

10. **ஜெர்மனியர்கள் இறுதியில் ________ ஆம் ஆண்டு நவம்பரில் சரணடைந்தனர்.**
அ) 1914 ஆ) 1918 இ) 1920 ஈ) 1925 **[விடை : ஆ) 1918]**

11. **பாரிஸ் அமைதி நாடு நடைப்பெற்ற ஆண்டு ________**
அ) 1917 ஆ) 1918 இ) 1919 ஈ) 1924 **[விடை : இ) 1919]**



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full BookOrder Online and Available at All Leading Bookstores



# அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?
   அ) ஆகாயப் போர்முறை ஆ) பதுங்குக் குழி போர்முறை
   இ) நீர்மூழ்கிக் கப்பல் போர்முறை ஈ) கடற்படைப் போர்முறை
2. எந்த நாடு முதல் உலகப்போருக்குப் பின்னர் தனித்திருக்கும் கொள்கையைக் கைக்கொண்டது?
   அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ் இ) ஜெர்மனி ஈ) அமெரிக்கா
3. 19ம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?
   அ) சீனா ஆ) ஜப்பான் இ) கொரியா ஈ) மங்கோலியா

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. ______________ ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது.
5. டானென்பர்க் போரில் ________ பேரிழப்புகளுக்கு உள்ளானது.
6. 1913ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட ______ உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.

**III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.** (2 × 1 = 2)

7. i) முதல் உலகப்போர் வெடித்தபோது இத்தாலி நடுநிலைமை வகிக்கும் நாடாக இருந்தது.
   ii) வெர்செய்ல்ஸ் அமைதி உடன்படிக்கையில் இத்தாலி பெரும் ஏமாற்றமடைந்தது.
   iii) செவ்ரஸ் உடன்படிக்கை இத்தாலியுடன் கையெழுத்திடப்பட்டது.
   iv) சிறிய இடங்களான ட்ரைஸ்டி, இஸ்திரியா, தெற்கு டைரோல் போன்றவைகூட இத்தாலிக்கு மறுக்கப்பட்டது.
   அ) (i), (ii) ஆகியன சரி ஆ) (iii) சரி
   இ) (iv) சரி ஈ) (i), (iii), (iv) ஆகியன சரி
8. கூற்று : ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தக்களரியான போர்களில் முடிந்தன.
   காரணம் : சொந்த நாட்டு மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது.
   அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.
   ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
   இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு.
   ஈ) காரணம் சரி, ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை.

**IV. பொருத்துக** (4 × 1 = 4)

9. பிரெஸ்ட்-லிடோவஸ்க் உடன்படிக்கை - அ) துருக்கி
10. கமால் பாட்ஷா - ஆ) ரஷ்யாவும் ஜெர்மனியும்
11. எம்டன் - இ) வெர்செய்ல்ஸ்
12. கண்ணாடி மாளிகை - ஈ) சென்னை

**V. சுருக்கமாக விடையளிக்கவும்** (4 × 2 = 8)

13. கூட்டு நிறுவனம் என்றால் என்ன?
14. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
15. முஸ்தபா கமால் பாட்சா வகித்த பாத்திரமென்ன?
16. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?

**VI. விரிவான விடையளிக்கவும்** (1 × 5 = 5)

17. ரஷ்யப் புரட்சியின் விளைவுகள் பற்றி விளக்கவும்.

# விடைகள்

I. 1. ஆ) பதுங்குக் குழி போர்முறை 2. ஈ) அமெரிக்கா
3. ஆ) ஜப்பான்

II. 4. 1902 5. ரஷ்யா
6. இலண்டன்

III. 7. அ) I, II ஆகியன சரி 8. அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.

IV. 9. ரஷ்யாவும் ஜெர்மனியும் 10. துருக்கி
11. சென்னை 12. வெர்செய்ல்ஸ்

V. 13. பார்க்க சூராவின் கையேடு கூடுதல் வினா V - 2
14. பார்க்க சூராவின் கையேடு V - 1
15. பார்க்க சூராவின் கையேடு V - 5
16. பார்க்க சூராவின் கையேடு V - 3.

VI. 17. பார்க்க சூராவின் கையேடு கூடுதல் வினா VI - 1.

❖ ❖ ❖



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
www.surabooks.com